IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**OS.No.208/2020**

**நாள்– 10.08.2023**

**நவாஸ்கான்**

**வா.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் .செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்

**<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் மனநல ஆலோசகராக இருக்கிறேன். எம்எஸ்சி சைக்காலஜி படித்திருக்கிறேன். கடையநல்லூரில் அலுவலகம் வைத்திருக்கிறேன். அவ்வாறு மனநல ஆலோசகராக இருப்பதற்கு முறைப்படி அனுமதி எதுவும் பெறவில்லை. மாதம் 10 ஆயிரத்தில் இருந்து 15 ஆயிரம் வரை வருமானம் வரும். இது நிரந்தரமான வருமானம் இல்லை என்றால் சரிதான். இந்த வருமானம் கூடவும் செய்யலாம் குறையவும் செய்யலாம். 1ம் பிரதிவாதியை முதன்முதலாக கிரைய ஒப்பந்தம் போடும் போது தான் பார்த்தேன். 1ம் பிரதிவாதி பிஸியோதெரபிஸ்ட்டாக இருக்கிறார். அவர் எங்கு கிளினிக் வைத்திருக்கிறார் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து செங்கோட்டை பம்பு ஹவுஸ் ரோட்டில் உள்ளது. பம்பு ஹவுஸ் ரோடு செங்கோட்டையில் முக்கியமான பகுதி என்றால் சரிதான். எவ்வளவு சொத்திற்கு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தை நான் சென்று பார்த்திருக்கிறேன். ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக பார்த்தேன். கிரைய ஒப்பந்தம் போடும் போது அந்த இடம் சின்ன வீடாக இருந்தது. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் தாவா சொத்து மனையாகத்தான் காண்பிக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். இந்த மனையின் கிழமேல் தென்வடல் அளவு விபரங்கள் எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக வில்லங்க சான்றிதழ் எடுத்துப் பார்த்தேன். கிரைய ஒப்பந்த காலத்தில் பம்பு ஹவுஸ் ரோட்டில் உள்ள சொத்திற்கு ஒரு சென்ட் 15 லட்சம் மதிப்பு இருந்தது என்றால் அவ்வளவாக மதிப்பு இல்லை. எவ்வளவு மதிப்பு பெறும் என்று எனக்கு தெரியவில்லை. கிரைய ஒப்பந்தத்திற்கு முன்பணம் 12 லட்சம் கிரையத் தொகையாக கொடுத்தேன். மீதி 3 லட்சத்திற்கு எதற்காக ஒருவருடகால

அவகாசம் நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் பிரதிவாதியின் மனைவி கர்ப்பமாக இருந்ததால் 6 மாத கால அவகாசம் அவர் கேட்டார். அதனால் கூடுதலாக ஒருவருடகால அவகாசம் நிர்ணயம் செய்தேன். 1ம் பிரதிவாதியை எனக்கு நன்றாகத் தெரியும் என்றும், அவருடைய குடும்ப விபரங்களும் எனக்கு நன்றாகத் தெரியும் என்றும், 1ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும் 2015ல் இருந்து பிரிந்து வாழ்கிறார்கள் என்றும் அந்த விபரங்களும் எனக்கு தெரியும் என்றாலும் சரியல்ல. 29.10.2019ல் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது. பல்வேறு தேதிகளில் 1ம் பிரதிவாதி டிசம்பர் மாதத்தில் மட்டும் 30ஆயிரம் வரை என்னுடைய வங்கிக் கணக்கில் செலுத்தியிருக்கிறார் என்றால் சரிதான். ஜனவரி 2020ம் மாதம் 30 ஆயிரம் என்னுடைய வங்கிக் கணக்கில் செலுத்தியிருக்கிறார். அதே போல் பிப்ரவரி 2020ம் மாதம் 30 ஆயிரம் என்னுடைய வங்கிக் கணக்கில் செலுத்தியிருக்கிறார். மார்ச் 2020ல் கொரோனா தொற்றின் காரணமாக முழு ஊரடங்கு இருந்தது. கிரையம் செய்யும் எண்ணத்தில் 1ம் பிரதிவாதி என்னிடம் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தவில்லை என்றும், 2019 அக்டோபர் மாதம் 29ம் தேதி ரூ.10லட்சம் கடன்பெற்று அதற்கு வட்டியாக மாதம் ரூ.30 ஆயிரத்தை செலுத்துவதாக ஒப்புக்கொண்டு கடனுக்கு ஆதரவாக மட்டுமே வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றும், அதன் படி டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்களில் வட்டியை செலுத்தினார் என்றும், மார்ச் மாதம் கொரோனா தொற்று என்பதால் அவரால் வட்டி செலுத்த இயலவில்லை என்றும், அக்டோபர் மாதம் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. 2 வழக்கறிஞர் அறிவிப்புகள் அனுப்பிய பின்பு வழக்கு தாக்கல் செய்தபின்பு நாளது தேதிவரை மீதி ரூ.3 லட்சத்தை நீதிமன்றத்தில் டெபாசிட் செய்யவில்லை என்றால் வேண்டுமென்றால் டெபாசிட் செய்ய தயாராக இருக்கிறேன். இன்றைக்கு எனக்கு பணம் இல்லை. வழக்கு தாக்கல் செய்த போதும் அதற்கு பின்னிட்டு உள்ள காலங்களிலும் என்னிடத்தில் பணம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய வங்கிக் கணக்கில் பெரிதாக பணம் இல்லை. அதனால் தான் 3 லட்சத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் மனைவிதான் 2ம் பிரதிவாதி என்ற விபரத்தை 2ம் பிரதிவாதி மனு தாக்கல் செய்த பின்பு தான் எனக்கு தெரியவந்தது. 3, 4 பிரதிவாதிகள் 1, 2 பிரதிவாதிகளின் குழந்தைகள் என்றால் சரிதான். அவர்களுக்குள் விவாகரத்து சம்பந்தமான பிரச்சனை இருக்கிறது என்பதை

நீதிமன்றத்தில் இருந்த ஆவணங்கள் மூலமாக தெரிந்துகொண்டேன். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எதிராக தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் டிவிசி.4/2016 என்கிற வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறார் என்ற விபரத்தை இந்த மனு தாக்கல் செய்த பின்பு தெரிந்துகொண்டேன். தாவா கிரைய ஒப்பந்தம் போட்ட காலத்தில் 1ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும் பிரிந்து வாழ்ந்தார்கள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியை 2015ல் அடித்து விரட்டியதால் சொக்கம்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதிக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என்ற விபரம் தற்போது நீதிமன்றத்தில் இருந்து தெரிந்துகொண்டேன். டிவிசி.4/2016 வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை நீதிமன்ற அனுமதியில்லாமல் கிரையம் செய்யக்கூடாது என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் தற்போது தான் இந்த விபரம் தெரியவந்தது. இதே வழக்கில் தென்காசி நீதித்துறைநடுவர் நீதிமன்றம் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதி பிரதிமாதம் 10 ஆயிரம் வீதம் ஜீவனாம்சம் வழங்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்த விபரம் எனக்கு தெரியும் என்றால் இப்போது தான் தெரியவந்தது. நீதிமன்ற உத்தரவின் படி ஜீவனாம்ச தொகை செலுத்தாததால் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தில் சார்ஜ் ஏற்பட்டிருக்கிறது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. இப்போது 1ம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து கொண்டோம் என்றால் சரியல்ல. 2 முதல 4 பிரதிவாதிகளுக்கு தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் பலனை அனுபவிக்க விடக்கூடாது என்பதற்காக நானும், 1ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்துகொண்டு 1ம் பிரதிவாதி இந்த வழக்கை நடத்த முன்வரவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தற்போது எங்கிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியிடம் ஏதாவது பணம் எனக்கு வரவேண்டி இருந்தால் தனிப்பட்ட முறையில் தான் வசூலித்துக்கொள்ளவேண்டுமே தவிர ஜீவனாம்ச தொகைக்காக சார்ஜ் செய்யப்பட்ட தாவா சொத்தைப் பொறுத்து உத்தரவு பிறப்பிக்கக் கோர இயலாது என்றால் சரியல்ல. நான் தனிப்பட்ட முறையில் அவருக்கு கொடுக்கவில்லை. கிரையம் ஏற்படுத்துவதற்கு தான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறேன். தாவா சொத்து விபரங்கள் எனக்கு தெரியவில்லை என்றும், தாவா சொத்தை நான்

பார்வையிடவில்லை என்றும், கடனுக்காகத்தான் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றால் வீட்டைப் பார்த்து தான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறேன். வீட்டை நான் பார்க்கவில்லை என்றும், கிரைய ஒப்பந்தத்திலேயே மனை என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**